ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இலக்கம் - PS/EAD/Circular/3/2024 எனது இலக்கம்: PS/EAD/05/01
2024 ஏப்ரல் மாதம் ஆம் திகதி

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்து பிரதம செயலாளர்கள்
அனைத்து மாகாண சபைச் செயலாளர்கள்
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்
அனைத்து உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்
அனைத்து அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்

**உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2024 ஜுன் 05**

1972 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை ஸ்வீடனின் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற மானிட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு நடைபெற்ற தினத்தை நினைவுகூறும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஜுன் மாதம் 05 ஆந் திகதியானது உலக சுற்றாடல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றிருந்து ஐந்து தசாப்த காலத்திற்கும் அதிகமாக சுற்றாடலைப் பாதுகாத்து பேணுதல் தொடர்பாக உலகவாழ் மக்களை அறிவூட்டுவதற்கும், நாளுக்கு நாள் மேலெழக் கூடிய பூகோள சுற்றுச் சூழல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக உலகத் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வரும் நோக்கிலும், வருடா வருடம் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகளின் கீழ் உலக சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

02. ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தினால் இவ் வருடத்தின் உலக சுற்றாடல் தின விழாவின் தலைப்பாக Land Restoration, Desertification and Drought Resilience எனும் தொனிப் பொருள் முன் வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் **"பயனுறுதி மிக்க நிலப் பயன்பாட்டின் ஊடாக நலம் நிறைந்த நாடு"** எனும் தேசிய தலைப்பின் கீழ் இவ்வருடம் உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

03. வறட்சி மற்றும் பாலைவனமயமாக்கம் இன்றளவில் உலகம் முகங்கொடுக்கின்ற மிகப்பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. உலக வளிமண்டலவியல் இயக்கத்தினால் (WMO) 2021 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக வெளியிடப்பட்ட பூகோள காலநிலை நிகழ்வுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம், கடந்த 7 வருட காலப் பகுதியே உயர்ந்த வெப்பம் உணரப்பட்ட காலப் பகுதியென அறிக்கையிடப்பட்டுள்ளது, அவ்வாறே ஐக்கிய நாடுகளின் பாலைவனமயமாக்கத்தை இல்லாதொழிக்கும் கூட்டிணைப்பினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு தற்காலத்தில் உலகிலுள்ள முழுநிலப்பரப்பில் 40% ஆன நிலங்கள் அரிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், இதன் விளைவாக உலகில் வாழ்கின்ற அரைவாசி மக்களுக்கு நேரடியாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதன் நிதிசார் விளைவு உலக மொத்தத் தேசிய உற்பத்தியின் சரி பாதியென (44 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள்) கணிப்பிடப்பட்டுள்ளது. வறட்சி நிலவுகின்ற காலப் பகுதியைக் கருதுகையில் 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அது 29% அதிகரிப்பைக் காட்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இதன் விளைவாக 2050 ஆம் ஆண்டளவில் உலக சனத் தொகையில் கிட்டத்தட்ட ¾ பங்கினர் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வாய்ப்பிருப்பதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது

04. காடழிப்பு, முறையற்ற பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், அளவுக்குமீறி முன்னெடுக்கப்படுகின்ற அகழ்வுப் பணிகள் மற்றும் முறையற்ற கழிவு வெளியேற்றத்தினால் ஏற்படுகின்ற சூழல் மாசடைவு போன்ற காரணங்களால் இலங்கையினுள்ளும் நில வளம் வேகமாக அழிவடைதல் மற்றும் அரிப்புக்குள்ளாதல் ஆகியன முக்கிய பிரச்சனையாக கண்டறியப்பட்டுள்ளமையினை இங்கு சுட்டிக் காட்டலாம். இச்சவால் மிக்க நிலையிலிருந்து மீண்டெழும் பொருட்டு பாதிப்புக்குள்ளான நிலப் பகுதிகளை மறுசீரமைப்பதன் மூலம் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் தற்சமயம் பாதிப்புக்குள்ளாகாமல் காணப்படுகின்ற சுற்றாடல் தொகுதிகளை பாதுகாக்கும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன.

ගාලු මුවදොර, කොළඹ 01.
காலி முகத்திடல், கொழும்பு 01.
Galle Face, Colombo 01.

දුරකථන
தொலைபேசி
Telephones
+94 (0) 11 2354418
+94 (0) 11 2473873

ෆැක්ස්
தொலைநகல்
Fax
+94 (0) 11 2446657

ඊ - තැපැල
மின்னஞ்சல்
E-mail
prsec@presidentsoffice.lk

நடவடிக்கைகளை முன்னெடுத்தல் முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. அதனடிப்படையில், காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடைதல், உயிரினங்கள் அழிவடையும் சவாலுக்குத் தீர்வு காணுதல், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வாழ்வாதாரங்களை சுற்றாடல் நேயமிக்க வகையில் விருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்டதாக இம்முறை உலக சுற்றாடல் தினத்தை, இலங்கையில் **"பயனுறுதி மிக்க நிலப் பயன்பாட்டின் ஊடாக நலம் நிறைந்த நாடு"** எனும் தொனிப் பொருளின் கீழ் கொண்டாடுவதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

05. "உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டு 2016.05.03 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள 16/0775/704/020 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உலக சுற்றாடல் தின தேசிய விழாவுக்கு நேரொத்ததாக 2024 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதியிலிருந்து ஜூன் மாதம் 05 ஆந் திகதி வரையான காலப்பகுதி **"தேசிய சுற்றாடல் வாரம்"** ஆக இம்முறையும் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், அத்தினங்கள் பின்வருமாறு பெயரிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மே 30 | பேண்தகு காணி முகாமைத்துவத் தினம் |
| மே 31 | வளி மாசடைவு மற்றும் அதன் பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் தினம் |
| ஜூன் 01 | நீர் மற்றும் நீர் மூலாதாரங்களை பாதுகாக்கும் தினம் |
| ஜூன் 02 | உயிர்ப் பல்வகைமை பாதுகாப்புத் தினம் |
| ஜூன் 03 | சுற்றாடல் தூய்மைப்படுத்தல் தினம் |
| ஜூன் 04 | பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவத் தினம் |
| ஜூன் 05 | மர நடுகை மற்றும் உலக சுற்றாடல் தினக் கொண்டாட்டம் |

06. அதன் பிரகாரம், நாடு முழுவதுமுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைமையில் அவ் உள்ளூராட்சி அதிகார எல்லைப் பிரதேசங்களில் அகழ்வுப் பணிகள், மண்மேடுகளை வெட்டுதல், மணல் அகழ்வு மற்றும் காடழிப்பு போன்ற விடயங்கள் காரணமாகப் பாதிப்புக்குள்ளான நிலப் பகுதிகள் காணப்படுமாயின், அந்நிலப் பகுதிகளை முடிந்தளவுக்கு மீள் கட்டமைக்கும் பொருட்டு பொருத்தமான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

07. அவ்வாறே நாடு முழுவதிலுமுள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைப் பிரதேசங்களில் நிலப்பயன்பாடு தொடர்பாக வர்த்தக சமூகத்தினரை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும்.

08. நாடு முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைமையில் அவ்வதிகார பிரதேசங்களில் கழிவுகளை அகற்றும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற நிலங்களை நிலைபேறான வகையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

09. அவ்வாறே, அனைத்து அரச நிறுவனத் தலைவர்களினால் தமது அலுவலகப் பணியாட்டொகுதியினரையும், பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களையும், மாணவ மாணவிகளையும் உலக சுற்றாடல் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டுதல் மற்றும் பாடசாலை வளாகங்களிலுள்ள பொருத்தமான நிலப் பகுதிகளை வினைத்திறன் மிக்கதாக விருத்தி செய்யக் கூடிய வகையிலான நிகழ்ச்சித் திட்டங்களையும், மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது பொருத்தமாகும்.

10. மேலும், தேசிய சுற்றாடல் வாரத்தினுள் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார்துறையினர், பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்டத்துறையினர், அரச சார்பற்ற அமைப்புகள், சிவில் அமைப்புகளின் தலைமையில் மக்களின் பங்கேற்புடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதனைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

i. பாதிப்புக்குள்ளான நிலப் பகுதிகளை மறுசீரமைத்தல், மண் பாதுகாப்பு மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
ii. விவசாய நிலங்களை நீண்ட காலமாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் பண்படுத்துதல் தொடர்பாக விவசாயிகளையும், பெருந் தோட்டத் துறையினரையும் அறிவூட்டுதல்.
iii. வனாந்திரப் பகுதிகளை அதிகரிப்பதற்காக கிராமிய மட்டத்திலும், நிறுவன மட்டத்திலும் பொருத்தமான மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

iv. நீரேந்துப் பிரதேசங்கள், வனபாதுகாப்புப் பிரதேசங்கள், ஆற்றங் கரைகள், ஈரவலயங்கள் போன்ற சூழல் நேயம் மிக்க நிலப் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
v. உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
vi. பசுமைக் கரையோர கோட்பாட்டின் பிரகாரம் கரையோர வலயத்தில் மர வளர்ப்பை அதிகரித்தல் மற்றும் கரையோர வலயங்களை தூய்மைப்படுத்துதல்.
vii. கரையோர சுற்றாடல் தொகுதிகளை பேண்தகு வகையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்டல் தொகுதிகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
viii. கரையோரத்தை அண்டிய சுற்றாடல் வலயத்தினுள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பயன்பாட்டைக் குறைப்பதனை ஊக்குவித்தல்.
ix. வனப்புமிக்க, தூய்மையான நாடொன்றை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தமது இல்லத்திலிருந்தே ஆரம்பிப்பதற்குரிய முக்கியத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுதல்.
x. அலுவலகங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக முறையான கழிவு முகாமைத்துவச் செயன்முறைகளைப் பின்பற்றுதல்.
xi. பிரதேச ரீதியாக பசுமைத் தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
xii. வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகளிலிருந்து வெளியகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக்குகளை சேகரித்து கழிவுச் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

11. தேசிய சுற்றாடல் வாரத்தினுள் ஒவ்வொரு நிறுவனங்களினாலும் மேற்குறித்த உத்தேச சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பொருத்தமான வகையில் முன்னெடுக்கும் பொருட்டு திட்டங்களை வகுத்து அரசியல் தலைமைத்துவத்தின் பங்கேற்புடன் அதனை செயற்படுத்துதல் பொருத்தமாகவிருக்குமென மேலும் அறியத்தருகின்றேன்.

12. தேசிய சுற்றாடல் வாரத்தினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி https://drive.google.com/drive/folders/1EkzTzSHxqhTG2_0IHGQW9XeQPlUNYFe3?usp=sharing எனும் இணையத்தளத்தின் வாயிலாக அனுப்புவதற்கும் அல்லது அவ்வாறு அனுப்புவதற்கு இயலாத சந்தர்ப்பங்களில் அதன் வன்பிரதியினை சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

13. வருகின்ற ஆண்டுகளில் தேசிய சுற்றாடல் வாரம் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, அந்நிகழ்ச்சித்திட்டங்களை தமது நிறுவனங்களின், மாவட்டங்களின் அல்லது மாகாணங்களின் வருடாந்த திட்டங்களினுள் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தயவாக அறிவிக்கின்றேன்.

14. இச்செயற்பாடுகளை முன்னெடுக்கையில் அரசினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுமாறும் அறிவிக்கின்றேன்.

சுற்றாடல் நேயம் மிக்க சமூகமொன்றை உருவாக்குவதற்காக தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை மேன்மையானதொன்றெனக் கருதுகின்றேன்.

**ஒப்பம் / ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

தொலைபேசி இலக்கம் :0112 354422
தொலைநகல் :0112 446657
மின்னஞ்சல் :prsec@presidentsoffice.lk

பிரதிகள் -
01. பிரதம அமைச்சரின் செயலாளர்
02. அமைச்சரவைச் செயலாளர்
03. கணக்காய்வாளர் தலைமையதிபதி
04. செயலாளர், சுற்றாடல் அமைச்சு